TNRM010049032023



முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்

முன்னிலை– திரு.ஏ.கே.மெஹ்பூப்அலிகான், B.L.M.,L.L.M.,PG.D.PM/IR,
Dip.in.J.J & J.Psy., PG.DDF.,

முதன்மை மாவட்ட நீதிபதி,

இராமநாதபுரம்.

**2025ம் ஆண்டு ஜுலை மாதம் 31ம் நாள் வியாழக்கிழமை**

**அசல் வழக்கு எண்.122/ 2023**

**CNR.No.TNRM01-004903-2023**

சுரேஷ்குமார் ..வாதி

/எதிர்/

சபரிநாதன் ..பிரதிவாதி

இந்த அசல் வழக்கு இந்நீதிமன்றத்தின் முன் 17.07.2025–ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.S.ஹரிஹரன் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் A.R.நம்புநாயகம் அவர்கள் ஆஜராகியும், பின்னிட்டு பிரதிவாதியை அழைத்தும் ஆஜரில்லாததால் வருகையில்லா எதிரவராகத் தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையிலும், வாதி தரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை பரிசீலனை செய்தும் இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பிறப்பித்திடும்...

**<u>தீர்ப்புரை</u>**

வாதியிடம், பிரதிவாதி பெற்ற அசல் கடன்தொகை ரூ.10,00,000/– மற்றும் அதற்கான வட்டித்தொகை ரூ.1,07,333/– ஆகமொத்தம் ரூ.11,07,333/–த்திற்கு பிராது தாக்கல் செய்த தேதி முதல் வசூல் தேதிவரை பின்வட்டியுடன் பிரதிவாதி, வாதிக்கு செலுத்தக்கோரியும், வழக்கின் செலவுத்தொகையை வாதிக்கு,

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.07.31 17:51:35 +0530

பிரதிவாதி செலுத்தக்கோரியும், இவ்வழக்கின் தன்மைக்கேற்ப கருதும் இதர பரிகாரங்கள் வாதிக்கு வழங்கக் கோரி வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>பிராதின் சுருக்கம்:</u>–

(1) வாதியும், பிரதிவாதியும் நெருங்கிய நண்பர்கள் ஆவார்கள். பிரதிவாதி குடும்ப தேவைக்காக வாதியிடம் கடந்த 2022–ம் வருடம் அக்டோபர் முதல் தேதியில் ரூ.10,00,000/–ம் கடனாக கேட்டுள்ளதன் அடிப்படையில் 06.10.2022–ம் தேதியன்று பிரதிவாதிக்கு, வாதி வீட்டில் வைத்து ரூ.10,00,000/–த்தை விஜயலெட்சுமி மற்றும் கார்த்திக் ஆகியோர்கள் முன்னிலையில் வாதி கடனாக கொடுத்துள்ளார். மேற்படி கடனுக்கு ஆதரவாக பிரதிவாதி, வாதியின் பெயருக்கு மேற்படி தேதியில் புரோநோட் எழுதிக்கொடுத்ததில் விஜயலெட்சுமி மற்றும் கார்த்திக் ஆகியோர்கள் சாட்சி கையொப்பம் செய்துள்ளனர்.

(2) மேற்படி வாதியின் பெயருக்கு பிரதிவாதி எழுதிக்கொடுத்துள்ள புரோநோட்டில் கடன் தொகை ரூ.10,00,000/–த்திற்கு மாதம் ஒன்றிற்கு ரூ.100 க்கு ரூ.2%வட்டித்ருவதாக ஒப்புக்கொண்டும், வாதி கடன் தொகையை கேட்கும்போது செலுத்திவிட்டு புரோநோட்டை வாபஸ் பெற்றுக்கொள்வதாக கூறி மேற்படி புரோநோட்டை பிரதிவாதி எழுதிக்கொடுத்துள்ளார்.

(3) வாதியிடம், பிரதிவாதி பெற்ற கடன்தொகைக்கு இதுவரை பிரதிவாதி வட்டியோ, அசலோ திரும்ப செலுத்தவில்லை. வாதி, பிரதிவாதியிடம் பலமுறை மேற்படி கடன்தொகையையும், அதற்கான வட்டியையும் கேட்டதற்கு பிரதிவாதி காலதாமதம் செய்துவந்துள்ளார். பிரதிவாதிக்கு, வாதியிடம் பெற்ற கடனை திரும்ப செலுத்துவதற்கு போதுமான வசதி வாய்ப்புகள் மற்றும் சொத்துக்கள் இருந்தும் வாதியை ஏமாற்ற வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் பிரதிவாதி, வாதியிடம் வாங்கிய கடன் தொகையை செலுத்தாமல் வேண்டுமென்றே

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.07.31 17:51:41 +0530

ஏமாற்றி வந்துள்ளார். எனவே வாதியிடம், பிரதிவாதி பெற்ற அசல் கடன்தொகை ரூ.10,00,000/- மற்றும் அதற்கான வட்டித்தொகை ரூ.1,07,333/- ஆகமொத்தம் ரூ.11,07,333/-த்திற்கு பிராது தாக்கல் செய்த தேதி முதல் வசூல் தேதிவரை பின்வட்டியுடன் பிரதிவாதி, வாதிக்கு செலுத்தக்கோரியும், வாதியால் வழக்கு தாக்கல்செய்யப்பட்டுள்ளது.

3) வழக்கின் பிரதிவாதிக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை அனுப்பப்பட்டு அறிவிப்பை பெற்றுக்கொண்ட பிரதிவாதி வழக்கறிஞர் மூலம் ஆஜராகி எதிர்வழக்குரை தாக்கால்செய்யாததால் பிரதிவாதி வருகை இல்லாதவராக ஆக்கப்பட்டு ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளார்.

4) வாதி தரப்பில் வாதியானவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணம் குறியீடு செய்யப்படவில்லை.

5) <u>இவ்வழக்கில் கீழ்கண்ட எழுவினா விசாரணைக்காக வனையப்பட்டன:-</u>

வாதி வழக்குரையில் கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா?

<u>எழுவினாவிற்குரிய தீர்வு</u>

6) வாதி தரப்பு கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. வாதியிடம், பிரதிவாதி பெற்ற அசல் கடன்தொகை ரூ.10,00,000/- மற்றும் அதற்கான வட்டித்தொகை ரூ.1,07,333/- ஆகமொத்தம் ரூ.11,07,333/-த்திற்கு பிராது தாக்கல் செய்த தேதி முதல் வசூல் தேதிவரை பின்வட்டியுடன் பிரதிவாதி, வாதிக்கு செலுத்தக்கோரி வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.07.31 17:51:48 +0530

**7)** இவ்வழக்கின் வாதி சுரேஷ்குமார் என்பவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். வா.சா.1 தன்னுடைய நிரூபண வாக்குமூலத்தில், பிரதிவாதி அவரது குடும்ப தேவைக்காக வாதியிடம் 06.10.2022ம் தேதி ரூ.10,00,000/-த்தை பெற்றுக்கொண்டு மேற்படி கடன் தொகைக்கு ஆதரவாக 06.10.2022-ம் தேதியிட்ட வா.சா.ஆ.1 ஆன புரோநோட் எழுதிக்கொடுத்தாகவும், மேற்படி பிரதிவாதி, வாதி பெயருக்கு எழுதிக்கொடுத்த புரோநோட்டில் விஜயலெட்சுமி மற்றும் கார்த்திக் ஆகியோர்கள் சாட்சி கையொப்பம் செய்துள்ளதாகவும், மேற்படி வாதி பெயருக்கு பிரதிவாதி எழுதிக்கொடுத்த புரேநோட்டில் கடன் தொகை ரூ.10,00,000/-த்திற்கு மாதம் ஒன்றிற்கு ரூ.100/-க்கு ரூ.2% வட்டி தருவதாக ஒப்புக்கொண்டு வாதி கடன்தொகையை கேட்டும்போது செலுத்திவிட்டு புரோநோட்டை வாபஸ் பெற்றுக்கொள்வதாக கூறி மேற்படி புரோநோட்டை பிரதிவாதி எழுதிக்கொடுத்துள்ளதாகவும், வாதியிடம், பிரதிவாதி பெற்ற கடன்தொகைக்கு இதுநாள்வரை பிரதிவாதி வட்டியோ, அசலோ திரும்ப செலுத்தாமல் காலதாமதம் செய்து வருவதாகவும், பிரதிவாதிக்கு, வாதியிடம் பெற்ற கடனை திரும்ப செலுத்த போதுமான வசதி வாய்ப்புகள் மற்றும் சொத்துக்கள் இருந்தும் வாதியை ஏமாற்றவேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் , பிரதிவாதி வாதியிடம் வாங்கிய கடன் தொகையை செலுத்தாமல் வேண்டுமென்றே ஏமாற்றி வருவதாக வா.சா.1 சாட்சியம் அளித்துள்ளார்.

**8)** வாதி தன்னுடைய வழக்குரையில் கூறியுள்ள சங்கதிகளை பிரமாண வாக்குமூலமாக இந்நீதிமன்றத்தில் அவர் வாதி தரப்பு முதல் சாட்சியாக விசாரணை செய்யப்பட்டபோது தாக்கல் செய்துள்ளார். வாதி பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ள விஷயங்களை பிரதிவாதி ஆட்சேபித்து குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.07.31 17:51:53 +0530

**9)** வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுளள் ஆவணங்கள் மூலம் வாதி வழக்குரையில் கூறியுள்ள விஷயங்களை தெளிவாக நிரூபித்துள்ளார் என்பதாலும் அக்கூற்றுக்களை மறுத்துரைத்து பிரதிவாதி தரப்பில் எவ்வித எடுத்துரைப்பும் இல்லாத நிலையிலும், வாதி தரப்பில் தாக்கல்செய்யப்பட்டுள்ள ஆவணங்களின வாயிலாக வாதி தன்னுடைய வழக்கை நிரூபித்துள்ளார் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. எனவே வாதி வழக்குரையில் கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என எழுவினாவிற்கு பதிலளிக்கப்படுகிறது.

**இறுதியாக,** வாதியின் வழக்கு செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்பட்டு, வாதிக்கு, பிரதிவாதி செலுத்தவேண்டிய தாவா தொகை ரூ.11,07,333/–த்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ள தேதியிலிருந்து தீர்ப்பாணை தேதிவரை 9% வட்டியும் தீர்ப்பாணை தேதிமுதல் அசல் தொகை ரூ.10,00,000/– முழுவதும் செலுத்தும் நாள் வரை 6% பின் வட்டியுடன் மூன்றுமாத காலத்திற்குள் செலுத்த வேண்டுமென்று தீர்ப்பளிக்கப்படுகிறது

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2025ம் ஆண்டு ஜுலை திங்கள் 31ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.07.31 17:52:01 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.

**வாதிகள் தரப்பு சாட்சிகள்:**

வா.சா.1 – திரு. சுரேஷ்குமார்

**வாதி தரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 06.10.2022 | பிரதிவாதி, வாதிக்கு எழுதிக்கொடுத்த புரோநோட்டின் (அசல்) |

**பிரதிவாதி தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்** .. இல்லை

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.07.31 17:52:09 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.